## லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் - 2016

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவச் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

(அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு அல்லது விபரமான பட்டியல்கள் காணப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 13,435,435 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி கணிப்பீடு, சரியான தன்மை மற்றும் பூரணத் தன்மையை சரிபார்க்க முடியாதிருந்தது. மேலும், LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் வெளிப்படுத்தல் தேவைப்பாட்டின் பிரகாரம் அவற்றுக்கான பெறுமானத்தேய்வை கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வை கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 15,493,432 தொகையான இருப்பின் பெறுமதி கணிப்பீடு, சரியான தன்மை மற்றும் பூரணத்தன்மையை சரிபார்ப்பதற்கு என்னால் முடியாதிருந்தது. மேலும், கம்பனியானது LKAS 2 - இருப்புக்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அசைவற்ற இருப்புக்கள் மீதான நட்டங்களை இனங்காண்பதற்கு தவறியிருந்தது.

(இ) கிறேட்வோல் பஸ் செயற்திட்டத்திற்காக (Greatwall bus project) 1993 ஆம் ஆண்டில் ரூபா 12,970,875 தொகையான இருப்புக்களை கம்பனி பெற்றிருந்த போதிலும், அத்தகைய இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவ் இருப்புக்களின் உள்ளதன்மை மற்றும் பெறுமதி கணிப்பீடு தொடர்பான போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை அல்லது இருப்பு மதிப்பீட்டு அறிக்கையை வழங்குவதற்கு கம்பனி தவறியிருந்தது.

(ஈ) கம்பனியானது ரூபா 13,594,667 தொகையான அட்டுறுச் செலவினங்கள் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள், ரூபா 10,000 தொகையான சிற்றுண்டிச்சாலை வைப்புக்கள், ரூபா 276,692 தொகையான திரும்பிய காசோலைகள் மற்றும் ரூபா 306,317 தொகையான வியாபாரக் கடன்கொடுத்தோர்கள் என்பவற்றை நிர்வாகச் செலவினங்களிற்கு எதிராக பதிவழித்திருந்தது. இதன் விளைவாக நிர்வாகச் செலவினம் ரூபா 14,187,676 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) வருமான வரி, பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்காக கம்பனி பதிவு செய்திருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1833 இன் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் மற்றும் 2000 இன் தொழிற்சாலைகள் (திருத்தப்பட்டது) சட்டம் | |
| (i) 12(1) ஆம் பிரிவு | தொழிற்சாலைகளின் கட்டிடங்கள் சட்டத்தின் பிரகாரம் காற்றோட்டத்தை உறுதிப்படுத்துமபொருட்டு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) 13(1) ஆம் பிரிவு | தொழிற்சாலை தூய்மை, தட்ப வெப்பநிலை, காற்றோட்டம் மற்றும் ஒளியை பாதுகாக்கும் பொருட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 42(அ)(1) ஆம் பிரிவு | எவ்வித தீயணைப்பு கருவிகளும் பொருத்தப்பட்டிருக்கவில்லை. கட்டிடங்கள் மற்றும் ஊழியர்களுக்காக எவ்வித காப்புறுதி மேவுகைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) 50 ஆம் பிரிவு | எவ்வித நோயாளி வண்டி, மருத்துவ அலகுகள் அல்லது முதல் உதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| | (v) 53(1) ஆம் பிரிவு | தொழிற்சாலையின் ஊழியர்களுக்காக கண் பாதுகாப்பு உபகரணம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அல்லது சுகாதாரம் தொடர்பில் பாதுகாப்பு அளவிடைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தின் 23(அ) பிரிவு | தொழிற்சாலைக்காக அனுமதிப்பத்திரமொன்று பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 170(1) ஆம் பிரிவு | கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளர்க்கு வருடாந்த அறிக்கை (படிவம் 15) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகளை முன்னைய ஆண்டிற்கான ரூபா 408 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 5,085,866 மிகையொன்றாகக் காணப்பட்டமையால், மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 5,085,458 ஆன முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் ரூபா 38,691,555 தொகைக்கு பேரூந்துகளின் திருத்தங்களிலிருந்தான வருமானம் அதிகரித்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

உயர் தரத்தை உறுதிப்படுத்தி இழிந்த செலவினத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேரூந்துகளை முழுமையாக அல்லது பகுதியளவில் பழுதுபார்த்தல்களினை மேற்கொள்ளல், இருக்கைகள் மற்றும் இருக்கை மேலுறைகளுக்கான மெத்தைகளின்

(Cushions) தயாரிப்பு, மற்றும் போக்குவரத்து அமைச்சின் ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களின் திருத்தங்கள் போன்ற செயற்பாடுகள் லக்திவ எஞ்சினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் கடமைகளாக அதன் ஆரம்பத்தில் இனங்காணப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆண்டின் 4 காலாண்டுகளுக்காக 84 பேரூந்துகள் திருத்தஞ்செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 69 பேரூந்துகள் திருத்தஞ்செய்யப்பட்டிருந்தது. ஆகையினால், ஆண்டின் போது திருத்தஞ் செய்யப்பட வேண்டுமென திட்டமிடப்பட்ட பேரூந்துக்களின் 82 சதவீதம் மாத்திரம், திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிலையங்கள் மூலம் லக்திவ எஞ்சினியரிங் கம்பனிக்கு பேரூந்துக்கள் கையளிக்கப்பட்டிருந்த பின்னர், திருத்தங்களுக்காக பொறியியல் பிரிவுக்கு பேருந்துகளினை அனுப்புவதற்கு முன்னர் 05 தொடக்கம் 417 வரையான நாட்களின் வீச்சில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. திருத்தங்களுக்கு முன்னர் அவ்வாறான நீண்டதொரு தாமதம் ஏற்பட்டமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) முழுமையாக, பகுதியளவில் திருத்தஞ் செய்யப்பட்டிருந்த பேரூந்துக்களா என்பது தொடர்பில் அல்லது பேரூந்தின் தனிப்பட்ட நிலமையின் அடிப்படையில், அது தொடர்பில் நியமமான மதிப்பீடொன்றை தயாரிப்பதற்கு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான முறைமையொன்றின் பற்றாக்குறை காரணமாக மூலப்பொருட்களின் தேவைப்பாடுகளினை முறையாக இனங்காண்பதன் மூலம் இருப்புக் கட்டுப்பாட்டுக்கான முறையொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த கொள்வனவுகள் அவதானிக்கப்படவில்லை.

(உ) குறித்துரைக்கப்பட்ட முறைமையொன்றைப் பின்பற்றியிராது, ஒப்பந்த அடிப்படையில் கம்பனி ஊழியர்களைப் பெற்றிருந்தது. ஊழியர்களுக்காக மாத்திரம் செலுத்துகைகளினை மேற்கொண்டிருந்த அதேவேளை தேவையான மூலப்பொருட்கள் மற்றும் கருவிகள் கம்பனியால் வழங்கப்பட்டிருந்தது. ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்டவாறு பணிகளை நிறைவேற்றத் தவறுகையில் எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென உடன்படிக்கையில் எவ்வித நிபந்தனைகளும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ஊக்குவிப்புப் படிகளாக ஊழியர்களுக்கு ரூபா 3,129,352 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் அது தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் அல்லது ஏனைய முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எக்கலயில் அமைந்துள்ள அண்ணளவாக 23 ஏக்கர் பரப்பளவுடைய காணியொன்றின் பகுதியில் லக்திவ எஞ்சினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் அவர்களின் வியாபாரத்தை நடாத்திச் செல்கின்றனர். எவ்வாறாயினும், அந்தக் காணிக்கான சட்டரீதியான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பெறுகை நடைமுறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான உதிரிப்பாகங்களினைக் கொள்வனவுசெய்வதற்கு ரூபா 2,476,369 தொகையொன்று ஏற்பட்டிருந்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் ஏற்பாடுகளினைப் பின்பற்றியிராது 03 நிறுவகங்களிடமிருந்து பெறுகை உத்தியோகத்தரினால் தனிப்பட்ட ரீதியில் பெறப்பட்ட கூறுவிலையின் அடிப்படையில் அந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பேரூந்துக்களின் சேஸ் (Chassis) திருத்துகைக்கு தேவைப்படும் இருப்புக்களிலுள்ள உதிரிப்பாகங்களின் கொள்வனவுக்கான சாத்தியக்கூறு காணப்பட்ட போதிலும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அலகுகளில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், இருப்புக்களுக்காக மேற்கொள்ளப்படும் கொள்வனவுகளினூடாக உழைத்துக்கொள்ளக்கூடிய பொருளாதார நலன்கள் (தள்ளுபடிகள்) இழக்கப்பட்டது).

## 4.4 ஆளணி நிர்வாகம்

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 30 பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 121 ஆளணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் உள்ளபடியான பதவியணியினர் 65 எனக் குறிப்பிடப்பட்டமையால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 56 வெற்றிடங்கள் காணப்பட்டன. பொது முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர், கைத்தொழில் துறை பொறியியலாளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் போன்ற கம்பனிக்கான பிரதான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதவிகளுக்காக, கம்பனி மேவுகை அடிப்படையில் உத்தியோகத்தர்களினை நியமித்திருந்தது. ஆகையினால், கம்பனியில் முக்கிய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களினை நியமிக்க தவறியமையால், அவற்றின் சுமூகமான தொழிற்பாடுகளுக்கு தடையொன்றாகக் காணப்பட்டது.

## 05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-

## 5.1 கம்பனியின் உருவாக்கம் மற்றும் கம்பனியின் உரித்து

லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் 2001 ஒக்தோபர் 01 இல் அரசிற்கு சொந்தமான கம்பனியொன்றாக ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2011 ஆகஸ்ட் 15 இல் மீளப்பதிவு செய்யப்பட்டிருந்தது. கம்பனியின் அங்கீகரித்த மூலதனமானது ரூபா 10/- ஆன 650,000 சாதாரணப் பங்குகளை கொண்டிருந்ததுடன், அவற்றுள் 2 பங்குகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. குறித்த அந்த இரு பங்குகளும் பொது திறைசேரி செயலாளர் மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளரால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 5.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு

ஆண்டறிக்கைகள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 01 வருடம் 05 மாதங்கள் தாமதமொன்றின் பின்னர், 2018 செப்தெம்பர் 25 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய மற்றும் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவிற்கமைய வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் தூரநோக்கு மற்றும் செயற்பணியை நிறைவேற்றுவதற்காக 3 வருடங்களுக்கு குறையாத காலப்பகுதியொன்றுக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 உள்ளகக் கணக்காய்வு

வரையறுக்கப்பட்ட லக்திவ என்ஜினியரிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் பணிகளை பரிசோதிப்பதற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.5 பெறுகைகள் திட்டம்

2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) பிரிவின் பிரகாரம் கம்பனியால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 06. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வவ்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | அவதானிப்பு |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணத்தவறியமை மற்றும் நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யத் தவறியமை. |
| (ஆ) இருப்புக் கட்டுப்பாடு | இருப்பு மெய்மையாய்வை நடாத்தத் தவறியமை |